**டிசம்பர் – 08**

# TNPSC துளிகள்

- ❖ மதுரையில் சுதந்திரப் போராட்ட வீரர் வேலு நாச்சியார் பெயரிடப்பட்ட மேலமடை சந்திப்பு மேம்பாலம் தமிழக முதல்வரால் திறந்து வைக்கப் பட்டது.
- ❖ அலுவலக நேரத்திற்குப் பிறகான வேலை தொடர்பான அழைப்புகள் மற்றும் மின்னஞ்சல்களுக்கு ஊழியர்கள் பதிலளிப்பதைத் தவிர்ப்பதற்கு வகை செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு தனி நபர் மசோதா (துண்டிப்பு உரிமை மசோதா) ஆனது தேசிய காங்கிரஸ் கட்சியின் (NCP) பாராளுமன்ற உறுப்பினர் சுப்ரியா சுலேவால் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ ஜோக்பானி-பிரட்நகர் உள்ளிட்ட முக்கியப் போக்குவரத்து வழித்தடங்கள் வழியாக இரயில் அடிப்படையிலான வர்த்தக இணைப்பை விரிவுபடுத்துவதற்காக இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் ஒரு பரிமாற்றக் கடிதத்தில் கையெழுத்திட்டன.
- ❖ சமர்கண்டில் நடைபெற்ற 43வது யுனெஸ்கோ பொது மாநாட்டின் போது 2025–2029 ஆகிய காலத்திற்கான யுனெஸ்கோ மனித மற்றும் உயிர்க்கோளக் காப்பகம் (MAB) சபையின் உறுப்பினராக ஓமன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ❖ விக்டோரியா பல்கலைக்கழகம் (ஆஸ்திரேலியா) ஆனது 2026 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் குருகிராமில் (அரியானா) அதன் முதல் இந்திய வளாகத்தைத் திறக்க உள்ளது.
  - ○ இது இந்தியாவின் தேசியக் கல்விக் கொள்கையின் (NEP 2020) கீழ் அங்கீகரிக்கப் பட்ட முதல் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும்.
- ❖ 2030 ஆம் ஆண்டிற்குள் வடகிழக்கு இந்தியாவிலிருந்து மீதமுள்ள 5,800 பினீ மெனாஷே யூதர்களை அழைத்து வருவதற்கான திட்டத்தை இஸ்ரேல் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் தேதியன்று அங்கீகரித்தது.
  - ○ இந்தத் திட்டத்தில் பயணம், வீட்டு வசதி, எபிரேய பாடங்கள் மற்றும் மதமாற்ற வகுப்புகளுக்கு 90 மில்லியன் ஷெக்கல்கள் (27 மில்லியன் டாலர்) சிறப்பு நிதி ஒதுக்கீடு அடங்கும்.


# தேசியச் செய்திகள்

## தேசிய பாதுகாப்பு வீத வரி மசோதா, 2025

- ❖ மக்களவையானது 2025 ஆம் ஆண்டு சுகாதாரப் பாதுகாப்பு தேசிய பாதுகாப்பு வீத வரி மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- ❖ இந்தியாவின் சுகாதாரம் மற்றும் தேசியப் பாதுகாப்பை ஆதரிப்பதற்காக பான் மசாலா தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களுக்கு வீத வரி விதிப்பதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த வீத வரித் தொகை என்பது ஒரு இயந்திரம் ஒரு நிமிடத்திற்கு எத்தனை பைகளை உற்பத்தி செய்கிறது மற்றும் ஒவ்வொரு பையிலும் பேக் செய்யப்பட்ட பான் மசாலாவின் எடையைப் பொறுத்தது ஆகும்.
- ❖ ஓர் இயந்திரத்திற்கு மாதத்திற்கு 1.01 கோடி முதல் 2.5 கோடி ரூபாய் வரை வீத வரி விதிக்கப் படுகிறது என்ற நிலையில் மீறினால் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.
- ❖ உலகளாவிய வயது வந்தோர் புகையிலைப் பயன்பாட்டுக் கணக்கெடுப்பின் (GATS-2)

படி, இந்தியாவில் சுமார் 42% ஆண்களும் 14% பெண்களும் புகையிலையினைப் பயன்படுத்துகின்றனர்.

- இதனோடு, உலகின் புகையிலைப் பயன்பாட்டாளர்களில் இந்தியாவின் பங்கு 70% ஆக உள்ளது.
- 2016-17 ஆம் ஆண்டில் இந்தியாவில் புகையிலைப் பயன்பாட்டின் பொருளாதாரச் செலவினம் 1.77 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.
- வசூலிக்கப்படும் வரிகளில் 41% மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என்று அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.




## இந்தியாவின் குவாண்டம் 2047 செயல் திட்டம்




- நிதி ஆயோக் அமைப்பின் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்ப மையம் ஆனது, 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவினை குவாண்டம் மூலம் இயங்கும் மூன்று முன்னணிப் பொருளாதாரங்களில் ஒன்றாக மாற்றுவதற்கான ஒரு செயல் திட்டத்தினை வெளியிட்டது.
- சர்வதேச வணிக இயந்திரங்கள் கழகத்துடன் (IBM) இணைந்து உருவாக்கப்பட்ட இந்த செயல்திட்டம், ஆராய்ச்சி, திறமை, வணிகமயமாக்கல் மற்றும் குவாண்டம் தொழில் நுட்பச் செயலாக்கத்தினை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்தியாவில் குவாண்டம் கணினி, பாதுகாப்பான தகவல் தொடர்பு, துல்லியமான உணர் நுட்பம் மற்றும் மேம்பட்ட பொருட்கள் ஆகியவற்றிற்கு விரிவுபடுத்துவதற்கான

தேசிய குவாண்டம் திட்டத்தினை இது உருவாக்குகிறது.

❖ சுகாதாரம், நிதி, தளவாடங்கள், எரிசக்தி மற்றும் தேசியப் பாதுகாப்பு போன்ற துறைகளை மாற்றுவதில் குவாண்டம் தொழில்நுட்பங்களின் பங்கை இந்தச் செயல் திட்டம் எடுத்துக்காட்டுகிறது.

## நிகரச் சுழிய உமிழ்விற்கான CCUS செயல் திட்டம்


❖ கார்பன் பிடிப்பு, பயன்பாடு மற்றும் சேமிப்பு (CCUS) ஆகியவற்றிற்கான முதல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயல் திட்டத்தினை இந்தியா அறிமுகப்படுத்தியது.

❖ இந்தச் செயல் திட்டமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் தயாரிக்கப் பட்டது.

❖ CCUS தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் செயலாக்கத்திற்கு வழிகாட்டுவதன் மூலம் 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய உமிழ்வை அடைவதற்கான இந்தியாவின் பருவநிலை இலக்கை ஆதரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ மின்சாரம், சிமெண்ட் மற்றும் எஃகு போன்ற அசல் தொழிற்சாலைகளில் கார்பன் நீக்கத்தை ஆதரிப்பதற்காக CCUS சோதனை படுக்கைகளை DST உருவாக்கியுள்ளது.

❖ தொழில்நுட்ப முன்னுரிமைகள், நிதியளிப்புப் பாதைகள், திறன் மிக்க மனிதவளம், பாதுகாப்புத் தரநிலைகள் மற்றும் பகிரப்பட்ட உள்கட்டமைப்பு ஆகியவற்றை இந்தச் செயல் திட்டம் வழிநடத்துகிறது.




## புதிய சமூக நோய் அறிக்கையிடல் அமைப்பு

❖ நோய்த் தொற்றுகள் குறித்த முன் எச்சரிக்கைகளை வழங்க தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையம் (NCDC) குடிமக்கள் சார்ந்த அறிக்கையிடல் முறையை அறிமுகப் படுத்தியது.


❖ சுகாதார அமைச்சகம் மற்றும் NCDC வழங்கிய விரைவு துலங்கல் (QR) குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் அசாதாரண சுகாதார நிகழ்வுகள் குறித்து மக்கள் இதில் புகாரளிக்கலாம்.

❖ ஒவ்வோர் அறிக்கையும் ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டத்தின் (IDSP) கீழ் உள்ள மாவட்ட, மாநில மற்றும் தேசிய முகப்புப் பக்கங்களுக்கு உடனடியாக அனுப்பப் படும்.

❖ பயனர் தரவைப் பாதுகாப்பதற்காக இந்த அமைப்பானது, பாதுகாப்பான அரசு


சேவையகங்கள் மற்றும் இணைய வெளிப் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பயன்படுத்துகிறது.

- 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நாடு தழுவிய அளவில் அறிமுகப் படுத்தப் பட்டதிலிருந்து சுமார் 100 சரிபார்க்கப்பட்ட அறிக்கைகள் மட்டுமே பதிவு செய்யப் பட்டிருந்தாலும், நோயாளிகள் சுகாதார மையங்களை அடைவதற்கு முன்னதாகவே தொற்றுக்களைக் கண்டறிவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆடம் சினி அரிசி




- பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் (BHU) அறிவியலாளர்கள் தகவமைப்பு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க சடுதி மாற்றத்தினை/பிறழ்வு உருவாக்கத்தைப் பயன்படுத்தி ஆடம் சினி அரிசியை மேம்படுத்தியுள்ளனர்.
- ஆடம் சினி அரிசி என்பது ஒரு நறுமணம் கொண்ட கருப்பு அரிசி வகையாகும் என்ற நிலையில் இது பிரதானமாக கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் சந்தௌலி, வாரணாசி மற்றும் விந்தியப் பகுதி உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்படுகிறது.
- இது 2023 ஆம் ஆண்டில் புவி சார் குறியீட்டினை (GI) பெற்றது.
- அசல் வகையானது சர்க்கரை-படிகம் போன்ற மணிகளைக் கொண்டுள்ளது என்ற நிலையில் 165 செ.மீ வரை வளரும் இந்த அரிசி, 155 நாட்களில் முதிர்வடையும்

என்பதோடு மேலும் இது ஹெக்டேருக்கு 20–23 குவிண்டால் மகசூலையும் அளிக்கிறது.

- அதே நறுமணம் தக்க வைக்கப் பட்ட மேம்படுத்தப்பட்ட வகைகளானது தற்போது குறைந்த உயரம் (105 செ.மீ), முன் கூட்டிய முதிர்வு (120 நாட்கள்) மற்றும் அதிக மகசூல் (ஹெக்டேருக்கு 30–35 குவிண்டால்) ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## ‘சஹஜீவன்’ தெருநாய் மேலாண்மை திட்டம் – அசாம்




- தெருநாய்களைப் பொது இடங்களிலிருந்து காப்பிடங்களுக்கு மாற்றுவதற்கான உச்ச நீதிமன்ற உத்தரவுகளுக்குப் பிறகு கௌஹாத்தி மாநகராட்சிக் கழகம் (GMC) “சஹஜீவன்” திட்டத்தைத் தொடங்கியது.
- இந்தத் திட்டம் நாய்களைப் பாதுகாப்பாக இடமாற்றம் செய்தல், அவற்றுக்கு தடுப்பூசி போடுதல் மற்றும் மனித-விலங்கு சகவாழ்வை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- 2014 ஆம் ஆண்டு முதல், விலங்கு பிறப்புக் கட்டுப்பாடு (ABC) திட்டத்தின் கீழ் GMC 24,016 நாய்களுக்கு கருத்தடை செய்துள்ளது.
- ஆனால் அசாமில் நாய்க் கடிப் பாதிப்புகள் சுமார் 90,000 (2013) எண்ணிக்கையிலிருந்து 1.5 லட்சமாக (2024) உயர்ந்தன.
- அதிகரித்து வரும் தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த என்று தடுப்பூசி, கருத்தடை மற்றும் உணவளிக்கும் ஏற்பாடுகளை விரிவுபடுத்துவதே இந்தப் புதிய திட்டத்தின் நோக்கமாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## JSJB விருதுகள் 2025

- ஜல் சக்தி அமைச்சகம் ஆனது, 2025 ஆம் ஆண்டிற்கான ஜல் சஞ்சய் ஜன் பகிதாரி (JSJB) விருதுகளை அறிவித்தது.


- இந்த விருதுகள் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 06 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட ஜல் சக்தி அபியான்: கேட்ச் தி ரெயின் (JSA: CTR) பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும்.
- தெலுங்கானா, சத்தீஸ்கர் மற்றும் இராஜஸ்தான் ஆகியவை சிறப்பாகச் செயலாற்றும் மாநிலங்கள் ஆகும்.
- மிர்சாபூர் (உத்தரப் பிரதேசம்), பலோட் (சத்தீஸ்கர்), மற்றும் அடிலாபாத் (தெலுங்கானா) ஆகியவை இதில் முன்னணி மாவட்டங்கள் ஆகும்.
- ராய்ப்பூர் (சத்தீஸ்கர்) மற்றும் ஐதராபாத் (தெலுங்கானா) ஆகியவை இதில் சிறந்த மாநகராட்சிக் கழகங்கள் ஆகும்.
- சிறந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் புரவல அமைப்புகள் Jaltara Save Groundwater, Art of Living, மற்றும் கர்மபூமி சே மாதபூமி ஆகியவை ஆகும்.

| **The Ministry of Jal Shakti announced the Jal Sanchay Jan Bhagidari (JSJB) Awards 2025**<br>The awards are part of the Jal Shakti Abhiyan: Catch the Rain (JSA: CTR) campaign launched on 6 September 2024 | |
|---|---|
| **Best Performing States** | Telangana<br>Chhattisgarh |
| **Top Districts** | Mirzapur (Uttar Pradesh)<br>Balod (Chhattisgarh)<br>Adilabad (Telangana) |
| **Best Municipal Corporations** | Raipur (Chhattisgarh)<br>Hyderabad (Telangana) |
| **Best NGOs and Philanthropists** | Jaltara Save Groundwater<br>Art of Living<br>Karmabhoomi se Matrabhoomi |

## 2025 ஆம் ஆண்டின் இன்ஃபோசிஸ் பரிசு

- இன்ஃபோசிஸ் அறிவியல் அறக்கட்டளையானது 2025 ஆம் ஆண்டிற்கான பரிசை ஆறு முக்கியப் பிரிவுகளில் அறிவித்துள்ளது.
- ஒவ்வொரு வெற்றியாளருக்கும் தங்கப் பதக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் 100,000 டாலர் மதிப்பிலான பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.
- அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிகில் அகர்வால், சந்தை வடிவமைப்பு மற்றும் ஒதுக்கீட்டு வழிமுறைகளுக்காக பொருளாதாரப் பிரிவில் இந்தப் பரிசினை வென்றார்.
- கனடாவின் டொராண்டோ பல்கலைக்கழகத்தின் சுஷாந்த் சச்தேவா, கணித சீராக்கம் மற்றும் வழிமுறைக் கோட்பாட்டிற்காக என பொறியியல் மற்றும் கணினி அறிவியல் பிரிவில் இந்தப் பரிசினை வென்றார்.
- அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகத்தின் ஆண்ட்ரூ ஒலெட், பிராகிருதம், கன்னடம் மற்றும் இந்திய மொழியியல் பற்றிய ஆராய்ச்சிக்காக மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் பிரிவில் இப்பரிசினை வென்றார்.
- இந்தியாவின் பெங்களூருவில் உள்ள தேசிய உயிரியல் அறிவியல் மையத்தின் அஞ்சனா பத்ரிநாராயணன், டிஎன்ஏ சீராக்கம் மற்றும் மரபணுப் பராமரிப்பு ஆய்வுகளுக்காக வாழ்க்கை அறிவியல் பிரிவில் இப்பரிசினை வென்றார்.

- மும்பையின் டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தின் சப்யசாச்சி முகர்ஜி, சிக்கலான இயக்கவியல் மற்றும் இணக்க கணிதத்திற்காக கணித அறிவியல் பிரிவில் இப்பரிசினை வென்றார்.
- கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த கார்த்திஷ் மந்திரம், நீடித்த நிலையான மின்வேதியியல் தொகுப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிபொருள் மூலமான இரசாயன உற்பத்திக்கான இயற்பியல் அறிவியல் பிரிவில் பரிசினைப் பெற்றார்.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச சிவிங்கிப் புலிகள் தினம் 2025 - டிசம்பர் 04




- சிவிங்கிப் புலிகளைப் பாதுகாப்பது மற்றும் அவற்றின் அழிவைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிவிங்கிப் புலிகள் வளங்காப்பு நிதியத்தின் (CCF) நிறுவனர் டாக்டர் லாரி மார்க்கர்

இந்த நாளை 2010 ஆம் ஆண்டில் தொடங்கினார்.

- இந்தியா 1952 ஆம் ஆண்டில் சிவிங்கிப் புலிகளை அழிந்து விட்ட இனமாக அறிவித்து, அவற்றை மீண்டும் அறிமுகப்படுத்த 2022 ஆம் ஆண்டில் சிவிங்கிப் புலிகள் வளங் காப்புத் திட்டத்தைத் தொடங்கியது.
- 2025 ஆம் ஆண்டு நிலவரப் படி, இந்தியாவில் பிறந்த 21 குட்டிகள் உட்பட மொத்தம் 32 சிவிங்கிப் புலிகள் உள்ளன.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தால் (IUCN) சிவிங்கிப் புலிகள் எளிதில் பாதிக்கப் படக்கூடியவையாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

## சர்வதேச தன்னார்வலர் தினம் 2025 - டிசம்பர் 05





- இந்த நாள் தன்னார்வலர்களைப் பாராட்டுவதையும், உலகளாவிய மேம்பாட்டிற்காக தன்னார்வப் பணிகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச தன்னார்வலர் தினம் ஆனது 1985 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் (UNGA) நிறுவப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டு ஆனது, UNGA தீர்மானத்தால் நிலையான மேம்பாட்டிற்கான சர்வதேச தன்னார்வலர்களின் ஆண்டாக (IVY 2026) அறிவிக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Every Contribution Matters" என்பதாகும்.

## உலக மண் தினம் 2025 - டிசம்பர் 05

- இந்த நாள் வாழ்க்கை மற்றும் நிலைத் தன்மைக்கு ஆரோக்கியமான மண்ணின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- உலக மண் தினம் ஆனது முதன்முதலில் 2002 ஆம் ஆண்டில் சர்வதேச மண் அறிவியல் ஒன்றியத்தால் (IUSS) முன்மொழியப்பட்டது.
- இது 2013 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது என்பதோடு மேலும் இந்தத் தினத்தின் முதல் கொண்டாட்டம் ஆனது 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 05 ஆம் தேதியன்று நடைபெற்றது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Healthy Soils for Healthy Cities" என்பதாகும்.




## இதரச் செய்திகள்


### கரஹான் டெபே - 11,000 ஆண்டுகள் பழமையான தளம்




- கரஹான் டெபே என்பது தென்கிழக்கு துர்கியேயின் சான்லியுர்ஃபா மாகாணத்தில், கோபெக்லி டெப்பேவின் நன்கு அறியப்பட்ட தளத்திற்கு அருகில் அமைந்துள்ள 11,000 ஆண்டுகள் பழமையான மட்பாண்டக் காலத்திற்கு முந்தைய புதிய கற்காலத் தளம் ஆகும்.
- இது தாஸ் டெப்பலர் (கல் மலைகள்) குழுவின் ஒரு பகுதியாகும்.

- டைக்ரிஸ் மற்றும் யூப்ரடீஸ் நதிகளுக்கு இடையில் ஒரு சுண்ணக்கல் பீடபூமியில் கிமு 9400 முதல் 8000 ஆம் ஆண்டு வரையில் இங்கு மக்கள் வசித்தனர்.
- இந்தத் தளத்தில் ஆரம்பகாலக் குடியிருப்புக் கட்டமைப்புகள், ஈமச்சடங்குத் தாழிகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட சமூக நடவடிக்கைகளைக் காட்டும் T-வடிவ ஒற்றைக் கல் சிற்பங்கள் உள்ளன.
- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் முதல் மனித முகம் கொண்ட T-வடிவ தூணையும், செதுக்கப்பட்ட மனித முகங்கள், தைக்கப்பட்ட உதடுகளைக் கொண்ட சிலைகள், செர்பென்டைன் மணிகள் மற்றும் கலப்பின விலங்கு-மனிதச் சிற்பங்களையும் கண்டறிந்தனர்.
- கரஹான் டெப்பேவில் செதுக்கப்பட்ட கைகள், கைகள், பட்டைகள், ரோம ஆடைகள் மற்றும் 2.3 மீட்டர் உயரமுள்ள ஆண் சிலையுடன் கூடிய மானுடவியல் சார் தூண்களும் உள்ளன.

## 2024 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்தப் பாதுகாப்புத் துறை நிறுவனங்கள்




- 2024 ஆம் ஆண்டில், SIPRI (ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம்) ஆனது 100 முன்னணி ஆயுத உற்பத்தி மற்றும் இராணுவ சேவைகள் நிறுவனங்களின் தர வரிசையை வெளியிட்டது.
- இந்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் (PSU) ஆனது இதன் முதல் 100 இடங்களில் இடம் பெற்றன. அவை
  - இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) – 44வது, 4,010 மில்லியன் டாலர்
  - பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) – 58வது, 2,750 மில்லியன் டாலர்
  - மேசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட் (MDL) – 91வது, 1,370 மில்லியன் டாலர்
- லாக்ஹீட் மார்ட்டின் (அமெரிக்கா), RTX (அமெரிக்கா), நார்த்ரோப் க்ரம்மன் (அமெரிக்கா) ஆகியவை 3 முன்னணி உலகளாவிய நிறுவனங்கள் ஆகும்.

- 2024 ஆம் ஆண்டில் 100 முன்னணி நிறுவனங்களின் மொத்த வருவாய் 679 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.
- 2023 ஆம் ஆண்டினை விட 8.2% அதிகமாக, இந்தியாவின் மொத்த ஆயுத வருவாய் 2024 ஆம் ஆண்டில் 7.5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது என்பதோடு இது உலகளாவிய ஆயுத வருவாயில் 1.1% பங்களிக்கிறது.
- 1966 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட SIPRI நிறுவனத்தின் தலைமையகம் சுவீடனின் ஸ்டாக் ஹோமில் உள்ளது.
- இது ஆயுத விற்பனை, இராணுவத் தயாரிப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளின் அடிப்படையில் ஆண்டுதோறும் இந்தத் தரவரிசையை வெளியிடுகிறது.

## இந்தியாவிற்கு மூன்று கின்னஸ் சாதனைகள்





- மத்திய சுகாதார அமைச்சகத்தின் தலைமையிலான ஸ்வஸ்த் நாரி, சஷக்த் பரிவார் அபியான் (SNSPA) திட்டத்தின் கீழ் இந்தியா மூன்று கின்னஸ் உலக சாதனைகளைப் பெற்றது.
- ஸ்வஸ்த் நாரி, சஷக்த் பரிவார் அபியான் என்பது ஆரோக்கியமான மற்றும் அதிகாரம் பெற்ற குடும்பங்களில் பெண்களின் ஆரோக்கியத்தினை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு நாடு தழுவிய சுகாதார முன்னெடுப்பாகும்.
- SNSPA ஆனது பெண்களின் ஆரோக்கியம், ஊட்டச்சத்து, ஆரம்பகால நோய் கண்டறிதல் மற்றும் அத்தியாவசிய சுகாதாரச் சேவைகளுக்கான அணுகல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- அதன் சாதனைகளில் பின்வருவன அடங்கும்,
  - ஒரு மாதத்தில் ஒரு சுகாதார தளத்தில் அதிகப் பதிவுகள் (3.21 கோடி),
  - ஒரு வாரத்தில் அதிக மார்பகப் புற்றுநோய் பரிசோதனைப் பதிவுகள் (9.94 லட்சம்), மற்றும்

    - மாநில அளவில் ஒரு வாரத்தில் மிக முக்கியமான அறிகுறிச் சோதனைகளுக்கான பதிவுகள் (1.25 லட்சம்).

❖ போஷன் மா (ஊட்டச்சத்து மாதம்) அனுசரிப்பின் போது இந்தப் பிரச்சாரம் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 02 ஆம் தேதி வரையில் நாடு தழுவிய அளவில் நடைபெற்றது.

❖ இந்த இயக்கம் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், புற்றுநோய், காசநோய், இரத்த சோகை மற்றும் பிற தடுப்பு சுகாதாரச் சோதனைகள் உட்பட இந்தியா முழுவதும் பெரிய அளவிலான சோதனைகளை செயல்படுத்தியது.

## ஆப்பிரிக்காவின் கண்டப் பிளவு




❖ 2025 ஆம் ஆண்டில் பகுப்பாய்வு செய்யப்பட்ட புதிய காந்தத் தரவு ஆனது, ஆப்பிரிக்கா இரண்டு நிலப்பரப்புகளாகப் பிரிவதற்கு வழி வகுக்கும் அஃபார் பிராந்தியத்தில் தொடர்ச்சியான மேலோடு பிரிப்புக்கான வலுவான ஆதாரங்களைக் காட்டுகிறது.

❖ அஃபார் பிராந்தியம் என்பது பிரதான எத்தியோப்பியன் பிளவு, செங்கடல் பிளவு மற்றும் ஏடன் வளைகுடா பிளவு ஆகியவை சந்திக்கும் முச்சந்தியாகும்.

❖ 1960 ஆம் ஆண்டுகளில் மறுபரிசீலனை செய்யப்பட்ட காந்தத் தரவுகள் ஆனது, ஆப்பிரிக்காவிற்கும் அரேபியாவிற்கும் இடையில் கடந்த கால கடல் தள விரிவினைக் காட்டுகிறது.

❖ கண்ட மேலோடு நீண்டு மெலிந்து வருவதால் கிழக்கு ஆப்பிரிக்க பிளவு என்பது விரிவடைகிறது.

❖ கண்டப் பிளவு வட கிழக்கில் இருந்து தெற்கு நோக்கி நகர்கிறது.

❖ சுமார் 5–10 மில்லியன் ஆண்டுகளில் ஒரு புதிய கடல் படுகை உருவாகக் கூடும் என்று அறிவியலாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★